6th August 1966]

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், ஜில்லாவுக்குள் தலைச் சுமையில் கொண்டுபோகப்படும் உணவு தானியங்களைத் தடை செய்யக்கூடாது என்று ஜில்லா அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறதா ? தலைச்சுமையில் கொண்டுபோகும் அளவுக்கு சைக்கிள்களிலும் கொண்டு போகலாம் என்று இதன் மூலம் எடுத்துக்கொள்ளலாமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தலைச்சுமையிலும், சைக்கிள்களிலும் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குத்தான் கொண்டு போகலாம். அரிசி 10 லிட்டர் அளவுக்கும், மற்றத் தானியங்கள் 10 கிலோ கிராம் அளவுக்கும் கொண்டு போகலாம் என்றிருக்கிறது. அதற்கு மேல் கொண்டுபோகவேண்டும் என்றால் பெர்மிஷன் வாங்கவேண்டும்.

*** 166 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்குத் தங்கள் சொந்தத் தேவைக்கு நெல், அரிசி எடுத்துச் செல்வதற்கு கெஜட்டெட் ஆபீசர்களும் பெர்மிட் பெறவேண்டுமா ?

(இ) ஆமெனில், அதற்கான பெர்மிட் யாரிடமிருந்து பெற வேண்டும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The permits may be obtained from the Revenue or Civil Supplies authorities not lower in rank than that of a Deputy Tahsildar having jurisdiction over area in which the land is situated.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கெஜட்டெட் அதிகாரிகள் தங்கள் சொந்த நெல்லை வெளியிடங்களிலிருந்து கொண்டு வருவதற்குத் தங்களைவிடக் குறைந்த அந்தஸ்துள்ள அதிகாரிகளிடத்தில் போய் பெர்மிஷன் வாங்குவதற்குத் தயக்கம் கொள்கிறார்கள். ஆகவே, இவர்கள் தேவையான தங்களுடைய தானியத்தைக் கொண்டு வருவதற்குத் தங்களைப் போன்ற அதிகாரியிடமிருந்து பெர்மிஷன் வாங்குவதற்கு வழிவகை ஏதேனும் செய்ய முடியுமா ? இல்லையென்றால் அதில் என்ன கஷ்டமிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதில் அந்தஸ்து குறைந்த அதிகாரி, உயர்வான அதிகாரி என்று எடுத்துக்கொள்ள முடியாது. யார் யாரிடத்தில் எந்தெந்த ஜூரிஸ்டிக்ஷனிலுள்ளவர்கள் பெர்மிஷன் வாங்கவேண்டும் என்றிருக்கிறதோ, அதன்படி கண்டிப்பாக பெர்மிஷன் வாங்கித்தான் ஆகவேண்டும்.